முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்.

**Succ.O.P.No. 30/2021**

**நாள்: 09.03.2023**

**ம.சா.2 கண்மணி என்பவர் ஆஜர். பிரமாணம் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

அஞ்சம்மாள் என்னுடைய ஊர்க்காரர். காங்கேயன்பேட்டையில் இருவரும் வசித்து வருகிறோம். எனக்கு திருமணமாகி 15 வருடங்களாகிறது. திருமணமாகி கடந்த 15 வருடங்களாக கணவருடன் வசித்து வருகிறேன். என்னுடைய பிறந்தஊர் செங்குழிமலைமேடு. காங்கேயன்பேட்டை என்னுடைய கணவரின் ஊர். கடந்த 15 வருடங்களாக கணவருடன்தான் வசித்து வருகிறேன். பிரமாண வாக்குமூலத்தில் அஞ்சம்மாள் சொன்னதன்பேரில் கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கனகசபை கடந்த 25 வருடங்களாக திருமழப்பாடியில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். கனகசபையை அவருடைய மகன்கள் கொலை செய்துவிட்டதாக வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். கனகசபை மனைவி, மகன்களை பராமரிக்காமல் கைவிட்டுவிட்டார் என அஞ்சம்மாள் கேட்டுக் கொண்டன்பேரில் அவர் உறவினர் என்பதால் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அஞ்சம்மாளுக்கு சொந்தமாக வீடு உள்ளது. வீடு விஸ்தீரணம் தெரியாது. நிலம் ஏதுமில்லை. அஞ்சம்மாளின் ஒரு மகன் வேலைக்கு போகிறார் என்றாலும், ஒரு மகன் படித்து வருகிறார் என்றாலும் சரிதான். நான் அஞ்சம்மாள் கேட்டுக் கொண்டதன்பேரில் உண்மைக்கு மாறான விபரங்களை சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அஞ்சம்மாள் குடும்ப விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அஞ்சம்மாளும், அவர் கணவரும் திருமணமான சில நாட்களிலேயே பிரச்சனை ஏற்பட்டு தனிதனியாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல, பிள்ளைகள் வளர்ந்த பிறகுதான் கணவன் மனைவிக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு பிரிந்துவிட்டார்கள். அவர்கள் பிரிந்து 10 வருடங்களுக்கு மேல் ஆகிறது.

**மறுவிசாரணை – இல்லை.**

(ஒம்)செல்வி.எஸ்.மகாலெட்சுமி,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.